

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞரின் கவிதைகள், திரைப்பட, நாடக வசனங்கள் ஒப்பித்தல் போட்டி நசரத்பேட்டையில் மாவட்ட அமைப்பாளரும் மாவட்ட கவுன்சிலருமான ஏஜி.ரவி ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையாற்றி வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் கேடயம் வழங்கினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் இறையன்பு குத்தூஸ், நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, ம.ராஜ், காயத்திரி ஸ்ரீதர் எம்.முத்தமிழ் செல்வன், ஜி.ஆர்.திருமலை, சி. தெய்வசிகாமணி, எஸ்.புகழேந்தி, பாலாஜி, மோகன்தாஸ், சோப்பு(ஏ)நவநீதன், கார்த்திக், கே.எம்.வி.ஆனந்த், டி.அண்ணாமலை, ஏ. ஜனார்த்தனன், எம்.இளையான், புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், சுமதிகுமார், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், வழக்கறிஞர் பெ.வினோத், பேட்டை டி.திருமலைராஜ், டி.குமரேசன், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, கேசவன், திருலோகசுந்தர், கே.ஜி.ஆர்.ஸ்டாலின், சுமதிஅத்தியகிரி, பவானி, ந.ச.பாலா, பரிமளாழகன், பிரியா செல்வம், கோவி. மணிகண்டன், ஜி வெங்கடேஷ், கே.குரு, ஜி கருணாகரன், எஸ். சீனிவாசன், எஸ்.வினோத், எஸ்.கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டர்கள்.



நேற்று (04.10.2024) தலைமைச் செயலகத்தில், வனத் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி தலைமையில் வனத்துறை அலுவலர்களுடன் துறை தொடர்பான செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வனத் துறை செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட செயலாளர் -அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை! ம.அசோக்குமார்- தலைமை!

# பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழா - மாபெரும் கால்பந்து போட்டி!

## அமைச்சர் மா.மதிவேந்தன் போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்!

சென்னை, அக். 5-

சென்னை கிழக்கு மாவட்டம்,திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்-10வது நிகழ்ச்சியாக “களத்தில் கால்கள் விளையாடும்! நிலத்தில் வெற்றி நமதாகும்!என்ற தலைப்பில் மாபெரும் கால்பந்து போட்டி 06.10.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணியளிவில், சென்னை-11, திரு.வி.க.நகர் மாநகராட்சி கால்பந்து விளையாட்டு மைதானத்தில்நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே. சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக் முன்னிலை வகிக்கின்றனர். சென்னை கிழக்கு மாவட் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்: எ.பாபுராஜ், வி.ஜெ.திலிப்ராஜ், எஸ். வடிவேல், எம்.கமலநாதன், ஆர்.சீனிவாசன், என். மோகன்குமார், த.விஜயகுமார், பி.ஆர்.யஷ்வந்த்குமார், கே.ஜெயகுமார், சி. லதா, எம்.இளங்கோவன், எ. விஜய் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் கால்பந்து போட்டியை மா.மதிவேந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கால்பந்து போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் வணக்கத்திற்குரிய மேயர் பிரியாராஜன், கழக அயலக அணித்தலைவர், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., கழகசட்டதிட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், இரா. விடுதலை, கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, தமிழன்பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர். வரதன், வே.உமாகாந்த். கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர்கள்: வே.கௌதமன், எஸ். ஆர்.பார்த்திபன், வே.நம்பி, பைந்தமிழ்பாரி, எஸ்.கார்த்திக், ஆர்.கோபால்ராம், சுரேஷ், ஜெ.மனோகரன், மு.வாசிம்ராஜா, நிவேதா ஜெஸிகா. மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட். ஆசாத் எம்.சி. மண்டல குழு - நிலைக்குழு தலைவர்கள்: கூ.பி.ஜெயின் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, எஸ்.இராஜசேகர், எஸ். முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ. மணி, டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, பி. உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலா தேவி, இரா.கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர். டி.சங்கர்நானா, வானவில்விஜய், நா.துலுக்காணம், ஜி. தாமோதரன், எல்.பி.எப். மோகன், சுதாதீனதயாயன் எம்.சி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, பி.விஜயகுமார், எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், இரா.வீரமணி. கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: எம்.தாவுத்பீ எம்.சி, கே. சாரதா எம்.சி, யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

67 அ வட்ட கழக செயலாளர்கே.ஜார்ஜ்குமார் நன்றி கூறுகிறார்.

### டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. - ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு:

# சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனை வழங்குகிறார்; மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிக்கை!

சென்னை, அக்.5

சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 07.10.2024 திங்கள்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு இராயபுரம் ரம்ஜான் மஹாலில் என் (சென்னை வடக்கு மாவட்ட



பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டம் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், க.ஜெயராமன், அ.முருகன், இரா.இலட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆகியோர்முன்னிலையில் மாவட்ட நிர்வாகிகள் ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர். கமலகண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, வி. தயாளன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர்.கலாநிதி வீராசாமி, எம்.பி., ஐட்ரீம். இரா. மூர்த்தி, எம்.எல்.ஏ., ஜே.ஜே. எபினேசர், எம்.எல்.ஏ., என். நவீன், ஏ.சரவணன், நந்தனம் நம்பிராஜன் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தா.இளைய அருணா, ந.மனோகரன், இரா.கருணாநிதி,

மாநில நிர்வாகிகள் -இரா. மதிவாணன், பி.டி.பாண்டி செல்வம், இரா.நரேந்திரன், பொதுகுழு உறுப்பினர்கள் இரா.சிவகுமார், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், பா.மதிவாணன், ஏ.தமிழ்செல்வன், டி.கமலக்கண்ணன், க.அமுல், மா.நெடுமாறன், டி.வி.முத்து கிருஷ்ணன், கு.நற்குணம், தமிழ்கொடி, சிவாஜிகிருஷ்ணமூர்த்தி மற்றும் பகுதி நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்டபகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், (BLA2) பாகநிலை முகவர்கள், பாக உறுப்பினர்கள்(BLC) மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கின்றோம்.

இராயபுரம் மேற்குப்பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மூர்த்தி

### அக்டோபர் 5 (2001)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# வரலாற்றின் புது வரவுகளை வாழ்த்துவோம்! கொண்டாடுவோம்!!

## ‘கணையாழி’ தலையங்கம்!

சிந்துவெளியை ஜான் மார்ஷல்
உலகிற்கு அறிவித்த நூற்றாண்டு இது!

முத்தமிழ் அறிஞர் கலைஞர்
உலகிற்கு வந்த நூற்றாண்டு இது!
இப்போது
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு உதய நிதியைத் துணை
முதல்வராக அறிவித்திருக்கிறார்!

மக்களைக் காக்கும் பணிச்சுமையை
இரு பக்கமும் தோளில் சுமக்கும்
சிந்துவெளிக் காவடிக் குறியீடாகப்
பார்க்கச் சொல்கிறார் ஜராவதம்.

பாரத்தைச் சுமக்கும் பொறையரை
ரிக் வேதம் பரதர் என்று குறிப்பிடுகிறதாம்!
பரதர் நாடு பாரத நாடாகி இருக்கிறதாம்!

இந்தியாவைப் பாரதம் என்பதற்குச்
சிந்துவெளிக் காவடிக் குறியீடே
காரணம் என்று ஜராவதம் சொல்கிறார்!

புறநானூறு 201 ஆம் பாடல்
பாரி மகளிரை இருங்கோவேளிடம்
அடைக்கலம் தர வந்த கபிலர் பாடல் அது.

வேளிர் என்பவர்கள் பொறையர் என்றும்
பொறை என்றால் சுமப்பவர் என்றும்
இரும்பொறை என்பது
சங்ககாலக் குடிப் பெயர் என்றும்
ஆட்சியதிகார பாரத்தைச் சுமப்பவர்
பாரதர் என்றும்
காரணம் சொல்கிறார் ஜராவதம்
அதனால்
இந்தியாவே சிந்து வெளியைக்
கொண்டாட வேண்டும்!

ஏனெனில்
இந்தியாவுக்குப் பெயர் தந்த நதி
சிந்து நதி!
சிந்து என்பதை இந்து என்று
உச்சரித்தவர்களால்
இந்தியாவுக்குப் பெயர் வந்திருக்கிறது!

உலகின் தொன்மையான
நாகரிகங்கள் நான்கில்
ஒன்று என்பது மட்டுமில்லை
உலக நகர நாகரிக வரலாற்றின்
முதன்மை அடையாளமும்
சிந்துவெளிதான்!

பிரிட்டிஷ் ஆட்சியில்
தபால் எடுத்துச் சென்ற
குதிரைகளின் கால்களைத்
தடுமாறச் செய்த தடயங்கள்!

இருப்புப் பாதைக்குத்
தோண்டிய இடங்களில் வெளிப்பட்ட
பெரிய பெரிய செங்கற்கள் எனத்
தன் இருப்பை ஆய்வாளர்களுக்கு
எடுத்துரைத்த பெருவெளி!

அகழாய்வை முறையாக
அரங்கேற்றி உலகிற்குக் காட்டியவர்
ஜான் மார்ஷல்!

அதனால்
வேத காலத்தில் தொடங்கிய
இந்திய வரலாறு
ஆரியர் வருகைக்கும் முற்பட்டது
என்பதை உலகம் அறிந்தது!

இந்திய வரலாற்றின் ஆதிப் புள்ளியை
வேதத்திலிருந்து சிந்துவெளிக்கு
மாற்றிக் காட்டியவர் ஜான் மார்ஷல்!
ஆரியர் வருகை தந்த காலமும்
சிந்துவெளி அழியத் தொடங்கிய காலமும்
கி.மு. 1900 என்று ஆய்வாளர்கள் கூறுவதில்
திராவிடத் தடயங்கள் வெளிப்படுகின்றன.

அகழாய்வில் கிடைத்த தடயங்களில்
யானை, ஒட்டகம், எருமை இருக்கின்றன.
அசுவமேத யாகம் நடத்திய குதிரை இல்லை!

தண்ணீரைக் கொண்டாடும்
வான்சிறப்புக்கு அடையாளமாகக்
குளம் இருக்கிறது!

ஆரிய வழிபாட்டின் யாகத் தீக்கு
அடையாளம் இல்லை.!

இந்தியாவுக்கென்று தனியாக
எழுத்துமுறை இருந்திருக்கிறது என்பது
சிந்துவெளியில் வெளிப்பட்டிருக்கிறது!
அதுவரை
எழுத்தின் தொன்மை வரலாற்றில்
இந்தியாவுக்கு இடம் இருந்ததில்லை.

கீறலாகவும் கிறுக்கலாகவும்
தெரிந்த குறியீடுகள்
படித்தறிய முடிந்தபோது
எழுத்துகள் ஆகின்றன.

சிந்துவெளிக் குறியீடுகளைப்
படித்து அறியும் முயற்சிகள்
இப்போதும் தொடர்கின்றன.

எழுத்து என்பது திராவிட மரபு
எழுதாக் கிளவி வேதமரபு!
எண்ணும் எழுத்தும்
திராவிட மக்களின் கண்கள்!

திராவிட நாகரிகமே
இந்தியாவின்
தொன்மையான நாகரிகம் என்பது
சிந்துவெளி தரும் ஒளி!

இந்தியாவின் தொன்மைக்கும் மேன்மைக்கும்
எடுத்துக்காட்டாக விளங்குகிறது
திராவிட நாகரிகம் எனும்
சிந்துவெளி நாகரிகம்!

கோவை செம்மொழி மாநாட்டில்
சிந்துவெளி ஆய்வாளர்
அஸ்கோ பர்ப்போலாவுக்குக்
விருது வழங்கிச் சிறப்பித்தார்
அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் !

சிந்துவெளிப் பண்பாட்டிற்குப்
புது வெளிச்சம் வந்த நூற்றாண்டை –
சிந்துவெளியை உலகின் கவனத்திற்கு
ஜான் மார்ஷல் அறிவித்த நூற்றாண்டைக்
கொண்டாடத் தவறிய
ஒன்றிய அரசுக்குச் சுட்டிக் காட்ட
முன்வந்திருக்கிறார் முதலமைச்சர்.

வரலாற்றிற்கு மட்டுமின்றித்
திராவிட மாடலுக்கும்
புது வெளிச்சம் தந்திருக்கும்
ஜான் மார்ஷலுக்குச்
சிலை எடுத்துக் கருத்தரங்கு நடத்தவும்
அறிவித்திருக்கிறார் முதலமைச்சர்!

ஆகவே
வரலாற்றின் புது வரவுகளை
வாழ்த்துவோம்!
கொண்டாடுவோம்!!



-நன்றி
‘கணையாழி’
அக்டோபர் - 2024

ம.ரா.